RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ ijmrd2412

# Challenges and Solutions for the political representation of Muslim Women in Sri Lanka : A research based on Oluvil region

# இலங்கையில் முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திலுள்ள சவால்களும் தீர்வுகளும் : ஒலுவில் பிரதேசத்தினை மையப்படுத்தி ஆய்வு

**T. Mohamed Mufas** [a,*], **C. Sivanayagam** [a]

[a] Department of Social Sciences, Eastern University, Chenkaladi, Sri Lanka.

*Corresponding author Email: sivanayagamc@esn.ac.lk

DOI: https://doi.org/10.54392/ijmrd2412

Received: 17-01-2024; Revised: 04-03-2024; Accepted: 12-03-2024; Published: 25-03-2024

**Abstract:** Political participation of all citizens who have franchise is essential in a democratic country. Hence, participation of both genders, men and women, should be ensured in political arena. To ensure the equal participation of both genders, women's participation is thus emphasized. according to the population ratio in Sri Lanka, women are dominant in number than men. However, political representation of women is recorded very low in electoral politics in the country. There is a crucial identification that the representation of Muslim women in political participation is considerably poor in many ways. Nonetheless, in post-independent politics in Sri Lanka, there were few Muslim women entered into public politics. Nowadays, it has gone drastically decreased in current politics in the country. In that way, it is notable that representation of women in Parliament, provincial council and other local government bodies are found very low than other ethnic women. this study has been done to identify the reasons for the lowest representation of Muslim women in politics, specifically based on Oluvil area. This area consists of seven GN divisions. And this study was conducted with the objective to find out challenges and solutions for the challenges in the political representation of women who have been inhabiting in the area. The study identified the following reasons that hinder the women's participation in politics, unwillingness to take part in public politics, anxiety in engaging politics in public sphere, physical insecurity, perception that public politics is suitable for powerful people like men, domestic burdens, lack of family support and rigid traditional and religious customs. In recognizing the challenges, this study proposed certain ways of managing these difficulties in order to promote political participation and representation of Muslim women in the area.

**Keywords:** Democracy, Political participation, Muslim Women, Political representation, Sri Lanka Muslim, Oluvil

**Language:** **Tamil**

## முன்னுரை

ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சியை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது. ஒரு ஜனநாயக நாட்டினது பண்புகளில் ஒன்றாக அரசியல் பங்குபற்றுதல் காணப்படுகின்றது. அதில் அரசியல் பிரதிநிதித்துவமானது அதிகமாக கவனிக்கப்படுகின்ற ஒரு விடயமாகும். ஒரு நாட்டினுடைய அரசியல் பிரதிநிதித்துவமானது ஆண், பெண் இரு பாலாரினையும் கொண்டதாக காணப்படுகின்ற போதே அதன் பூரண வெற்றியை அடைந்து கொள்கின்றது. அதாவது ஜனநாயக நாட்டில் அரசியல் துறையில் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடுகளின்றி இரு பாலினரும் இணைந்த செயற்பாடாகவே ஜனநாயக ஆட்சி முறை காணப்பட வேண்டும். இலங்கையின் தேசிய, உள்ளூர் மட்ட அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் அரசியல் பங்கேற்பானது குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இலங்கையின் சனத்தொகையில், 52 வீதமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும், பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 வீதத்திற்கும் குறைவானதாகவே உள்ளது (Kannaraj, 2018). இதன்படி

இலங்கையில் பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவமானது ஆண்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக காணப்பட்ட போதிலும் முஸ்லிம் பெண்கள் அரசியல் பங்குபற்றல் எனும் விடயத்தில் மற்றைய சமூகப் பெண்களுடன் ஒப்பிடுகின்ற போது ஆண்களை விட குறைந்தளவே பங்களிப்புச் செய்கின்றனர். அதிலும் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தேசிய, உள்ளூர் அரசியலில் குறைவாக உள்ளமை சமகாலத்தில் காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் பங்களிப்புச் செய்வதனை அவதானிக்க முடிகின்றது. இலங்கை அரசியல் வரலாற்றில் சுதந்திரத்திற்கு பிற்பாடு மூன்று முஸ்லிம் பெண் பிரதிநிதிகளே சட்டமன்றத்தில் பிரதிநிதிகளாக இருந்தனர். அவர்களில் ஆயிஷா ரவூப் 1949 (கொழும்பு மாநகர சபை உறுப்பினராக) அஞ்ஞான் உம்மா 1995 (பாராளுமன்றத்தில் தேசிய பட்டியல் உறுப்பினராக), மற்றும் பேரியல் அஸ்ரப் 2000ல் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தனர் (Saravanan, 2002). இவர்களின் பிற்பாடு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் நிலை கேள்விக் குறியாகவே காணப்பட்டுவருகின்றது.

பெரும்பாலான முஸ்லிம் பிரதேசங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இன்மையானது பெரும் குறைபாடாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் இவ் ஆய்வானது ஒலுவில் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஆராயும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட ஒலுவில் பிரதேசமானது இயற்கை அழகினால் சூழப்பட்டதும் மேற்கே வயல்வெளியையும் வடக்கே தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினையும், கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் தெற்கே கப்பற்த் துறைமுகத்தையும் எல்லைகளாக கொண்ட பிரதேசமாக ஒலுவில் பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு 7 கிராம சேவகர் பிரிவுகளிலும் 10,545 மக்கள் வாழ்கின்றனர். அதில் ஆண்கள் 5,251 பேர்களும் பெண்கள் 5,294 பேர்களும் காணப்படுகின்றனர் (பிரதேச செயலக அறிக்கை, 2020). அண்மைக்காலங்களில் இப் பிரதேசம் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியினை பெற்று வருகின்ற போதிலும் இதுவரையில் அரசியல் துறை சார்ந்து எந்தவொரு முஸ்லிம் பெண்ணும் அரசியல் பிரதிநிதித்துவத்தினை பெற்றுக் கொள்ளாமை பாரிய குறைபாடாகும். இருப்பினும் இலங்கையில் பெண்களின் சனத்தொகையானது 51.86 வீதமாகக் காணப்பட்ட போதிலும் தேசிய அரசியலில் 6 வீதத்திற்கும் குறைவான பெண்களே பங்களிப்பு செய்கின்றனர் (Nazeera et al, 2018). இது இலங்கை அரசியலில் பெண்களின் நிலையை தாழ்மைபடுத்தும் ஒன்றாக பார்க்கப்படுகிறது. இருந்தாலும் இவ்வாறு அரசியலில் பங்குபற்றும் பெண்கள் பெரும்பாலும் பெரும்பான்மை சமூகத்தை அதிகம் சார்ந்தவர்களாகவே உள்ளனர். சிறுபான்மை சமூகங்களில் ஒன்றான முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது தேசிய அரசியலில் முழுமையாக இல்லாமை முஸ்லிம் பெண்களை பொறுந்த வரையில் ஒரு பெரும் சவாலாகவே உள்ளது. இதற்கு இலங்கையில் முஸ்லிம் பெண்களின் அரசியல் பங்குபற்றல் குறித்து ஆர்வம் இல்லாமை, பெண் வேட்பாளருக்கு பெண்களே வாக்களிக்க முன்வராமை, மற்றும் பெண்களின் அரசியல் குறித்த இஸ்லாமிய மார்க்கத்தின் பிழையான புரிதல், குடும்ப அழுத்தம், குடும்பச் சுமைகள், கணவன் மற்றும் தனது உறவினர் ஆதரவின்மை, இறுக்கமான மதரீதியான மரபுவழித் தன்மை போன்றன சவால்களாகக் காணப்படுகின்றது. எனவே, இச்சவால்களினை ஆய்வுப் பிரச்சினையினையாகக் கொண்டு இக்கட்டுரை முன் கொண்டு செல்லப்படுகின்றது.

அந்தவகையில் அண்மைக்காலங்களில் ஒலுவில் பிரதேச பெண்கள் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை பெற்று வருகின்றனர். அதிலும் குறிப்பாக இன்று பட்டதாரிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் என பல்வேறுபட்ட துறைசார்ந்து முன்னிலை பெற்று வருகின்றபோதிலும் இதுவரையில் அரசியல் துறை சார்ந்து எந்தவொரு முஸ்லிம் பெண்ணும் அரசியல் பிரதிநிதித்துவத்தினை பெற்றுக் கொள்ளாமை பாரிய குறைபாடாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இப் பிரதேச முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு இது வரையில் ஒரு அரசியல் பிரதிநிதித்துவத்தினையும் இப் பிரதேசப் பெண்கள் பெற்றுக் கொள்ளாமைக்கான காரணங்களைக் கண்டறிவதுடன் முஸ்லிம் பெண்கள் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தடையாக விளங்கும் காரணிகளைக் கண்டறிவதனையும், முஸ்லிம் பெண்கள்

தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தடையாக விளங்கும் காரணிகளைக் வெளிக்கொண்டு வருதல், ஆய்வுப் பிரதேசத்தில் பெண்கள் அரசியல் ரீதியில் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறிதல் மற்றும் ஆய்வுப் பிரதேசத்தில் பெண்களின் தேர்தல் மூலமாக தெரிவினை அதிகரிப்பதற்கான வழிகளைக் கண்டறிதல் முதலியவற்றினை நோக்கமாகக் கொள்வதோடு அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் நோக்கில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டள்ளது. மேலும், இவ் ஆய்வானது முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதல் நிலைத்தரவுகள் அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டுள்ளது. இங்கு நேர்காணலானது பொதுமக்கள், மகளீர் அமைப்புக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், இல்லத்தரசிகள், அரசியல் ஆர்வலர்கள், ஆசிரியைகள், துறைசார் நிபுணர்கள் ஆகியவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக பொருத்தமான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளை பண்புசார் அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஒலுவில் பிரதேசத்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமைக்கான காரணிகள்

### அரசியலில் ஈடுபடுதல் தொடர்பாக ஆர்வமற்ற நிலை

அரசியல் பிரதிநிதித்துவ செயற்பாட்டினை நிர்ணயிக்கும் பிறிதொரு காரணியாக அரசியல் செயற்பாடுகள் மீது கொண்டுள்ள ஆர்வம் காணப்படுகின்றது. அந்தவகையில் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம் பெண்கள் பல்வேறு துறைகளான மருத்துவம், ஆசிரியர் துறை, சட்டத்துறை என்பவற்றில் அபரிதமான ஆர்வத்தில் இருப்பதுடன் கல்வித்துறை சார்பாக பல பதவி நிலைகளில் காணப்படுகின்ற போதிலும் அரசியல் துறையினை பொறுத்தவரையில் ஆர்வமற்ற நிலையில் காணப்படுவதுடன் "நாங்கள் வாக்கு மட்டும்தான் போடுவோம் பிரதிநிதித்துவம் வேண்டாம்" (நேர்காணல், 2023). அதாவது இவர்கள் தங்களுடைய கட்டாய உரிமைகளில் ஒன்றாகிய வாக்குரிமை விடயத்தில் மட்டுமே அதிக ஈடுபாடு உடையவர்களாக இருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. ஆனால் அவர்கள் அரசியலில் போட்டியிட விருப்பமில்லை என்பதை அறிய முடிந்தது.

### அரசியல் தொடர்பாக விழிப்புணர்வற்ற நிலை

இப்பிரதேச பெண்களைப் பொறுத்தவரையில் அரசியல் தொடர்பான விழிப்புணர்வுகள் குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் பெருமளவு கிராமப்புறம் சார்ந்த இயல்பினை உள்ளடக்கிய மக்களாக இவர்கள் காணப்படுவதே இதற்கு காரணம் என நேர்காணலின்போது அறிய முடிந்தது. அதாவது அரசியலில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வற்ற நிலை காணப்படுவதை (நேர்காணல், 2023) அறியமுடிந்தது.

### குடும்ப உறுப்பினர்களின் ஆதரவின்மையும் குடும்பச் சுமையும்

குடும்ப வாழ்க்கை செயற்பாட்டில் ஒரு பெண்ணின் வகிபாகம் மிக முக்கியமானதாகும். அந்தவகையில் பெண்களுடைய தலைமைத்துவத்தின் கீழே குடும்ப செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றது. இந்நிலையில் பெண்கள் அரசியல் தொடர்பில் ஈடுபாடு காட்ட முயற்சிகளை மேற்கொள்ள எத்தனிக்கின்ற போது அப் பெண்களுக்கு தடைக்கல்லாக அவர்களுடைய குடும்பமே காணப்படுகின்றது. அதாவது பெண்கள் அரசியலில் ஈடுபடுவதானது தங்கள் குடும்பம் சமூகத்தில் அல்லது கௌரவத்தில் ஒரு தாழ்வு நிலைக்கு உள்ளாகுவதாக உணர்கின்றனர் (நேர்காணல், 2023). அத்துடன் தனது குடும்ப உறுப்பினர்கள் நண்பர் வட்டத்தில் பேசு பொருளாக மாறும் என்ற உணர்வுடனான ஒரு வகையான அச்ச நிலையினை வெளிப்படுத்தினர் (நேர்காணல், 2023). இதன் காரணமாக அப்பெண்ணின் கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அப்பெண்ணுக்கு உற்சாகமளிக்காமல் அவநம்பிக்கையை ஏற்படுத்தி அதனை தடுத்து நிறுத்துபவர்களாக விளங்குகின்றனர். மேலும், இப்பிரதேசத்தில் பெரும்பாலன குடும்பங்களில் பெண்கள்; வேலைக்குச்

செல்லாதவளாக இருந்து அனைத்து வீட்டு வேலைகள் மற்றும் குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றாள். ஆனால் ஆண்கள் வேலைக்குப் சென்று சம்பாதிப்பவராக காணப்படுகின்றான். எனவே குடும்பத்தில் இவ்வாறான நிலை காணப்படும் போது பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கோ அரசியலில் தீரமானம் எடுப்பதற்கோ முடியாதவளாக காணப்படுகின்றாள். பெண்களுக்கு குடும்ப ரீதியான சுமைகள் அதிகமாக காணப்படுவதும் தனது குடும்ப தேவையைப் பூர்த்தி செய்யவே முழு நேரம் போதுமானதாக இருக்கவில்லை அவ்வாறான நிலையில் நாங்கள் எப்படி அரசியலில் ஈடுபட முடியும் (நேர்காணல், 2023). என்பதனை குறிப்பிட்டனர். மேலும், ஆண்கள் உழைத்துக் கொண்டு வருவார்கள் நாங்கள் (பெண்கள்) குடும்பத்தை பராமரித்து செல்பவர்களாக இந்த சமூகத்தில் வளர்க்கப்பட்டுள்ளோம் (நேர்காணல், 2023). இதனால் இவர்கள் தமது வீட்டில் உள்ள மற்றைய உறுப்பினர்களை பராமரித்தல் மற்றும் குடும்ப வேலைச்சுமை அரசியல் பிரதிநிதித்துவ செயற்பாடுகளுக்கு தடையாக அமைந்துள்ளதாக கூறிகின்றனர்.

## பெண் வேட்பாளருக்கு பெண்களே வாக்களிக்க முன்வராமை

ஒலுவில் பிரதேசத்தினை பொறுத்தவரையில் இது வரையில் ஒரே ஒரு பெண்ணே வெளிப்படையாக உள்ளுராட்சி மன்ற வெட்பாளராக தேர்தலில் போட்டியிட்டாலும் அப் பெண்ணுகு பெண்களின் ஆதரவு கிடைக்கவில்லை என்பதனை நேர்காணலின் போது தெரிவித்தார். எனவே இப்பிரதேசத்தில் ஒரு பெண் வேட்பாளராக போட்டியிட முன் வருகின்ற போது ஏனைய முஸ்லிம் பெண்கள் அப்பெண்ணை வரவேற்று, உற்சாகமளித்து ஆதரவளிக்கக்கூடிய மனநிலையில் காணப்படாமை பாரிய குறைபாடாகவுள்ளது. இதைவிட குறித்த பெண் தொடர்பாக அவதூறு பேசுவதும் அவரை விமர்சிப்பவர்களும் அப்பெண்ணின் முயற்சிகளுக்கு இடையூறாக இருப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்காக பேச முன்வந்த பெண்ணுக்கு வாக்களிக்காமல் தன் கணவர் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்ற வேட்பாளர்களுக்கே வாக்களிக்கும் மனநிலையில் உள்ளதனை (நேர்காணல், 2023). அவர்களின் கருத்துக்களிலிருந்து அறிய முடிந்தது. ஆதலால் இப்பிரதேசத்தில் ஆண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மட்டுமே இன்றுவரையில் காணப்படுகின்றது. ஆகவே உள்ளுராட்சி மன்ற பிரிதிநிதிகளில் இதுவரையில் எந்தவொரு பெண்ணும் இப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்படவில்லை. இந்நிலையானது பிரதிநிதிகளாக தெரிவு செய்வதில் பெண்களுக்கே தயக்க நிலை காணப்படுவதையும் ஆண்களின் அரசியல் மேலாதிக்க நிலை இப்பிரதேசத்தில் காணப்படுவதையும் அறிய முடிகின்றது.

## பெண்களின் பிரதிநிதித்துவத்தை பெற அரசியல் கட்சிகள் முன்வராமை

அரசியல் கட்சிகளில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக அங்கத்துவம் பெறுவது என்பது குறைவானதாகவே காணப்படுகின்றது. இதற்கு பெண்களிடம் காணப்படுகின்ற தாழ்வு மனப்பான்மையும் கட்சிகள் முன்வராமையுமே காரணமாக குறிப்பிடுகின்றனர். அரசியல் கட்சிகள் என்பது அதிகாரத்தை பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதனால் வெற்றி பெறக்கூடியவர்கள் என கருதுகின்ற குடும்பச் செல்வாக்கு, செல்வந்தர்கள், அரசியல் பரம்பரையில் உள்ளவர்கள் மற்றும் படித்தவர்களையே தேர்தலில் வேட்பாளர்களாக களமிறக்குகின்றனர். இங்கு தேர்தல் காலங்களில் மட்டும் பெண்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பயன்படுத்துகின்றனர். அதிலும் குறிப்பாகப் பெண்கள் பிரச்சார கூட்டங்களுக்கு அழைக்கப்படுவதுடன் பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் மட்டுப்படுத்தப்படுகின்றது. ஆகவே இங்கு முஸ்லிம் பெண்கள் சமூகத்தின் நலன் கருதி பெண் வேட்பாளர்களை களமிறக்கி அவர்களை வெற்றிபெறச் செய்து பெண்களின் பிரதிநிதித்துவத்திதை பெறுவதற்கு முன்வராமையானது ஆய்வுப் பிரதேசத்தில் பாரிய பிரச்சினையாக உள்ளது. ஆயினும் சில கட்சிகள் ஒரு சில பெண்களுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கினாலும் அவர்களை வெற்றிபெற முயற்சிக்காமையை அறியமுடிந்தது (நேர்காணல், 2023). இது போன்ற குற்றச்சாட்டுக்களை அரசியல் கட்சிகள் சார்பில் பெண்கள் முன்வைக்கின்றர்.

### பெண்களின் இயல்பான அச்சநிலை

பெண்கள் இயல்பாகவே வன்முறை சாரந்த செயற்பாடுகளுக்கு பயந்த இயல்பினைக் கொண்டவர்கள். இதனால் பெண்களைப் பொறுத்தவரையில் உடல், உள ரீதியாக வலிமை குறைந்தவர்களாகக் காணப்படுவதனால் அதிர்ச்சியான செய்திகள், சம்பவங்கள் என்பவற்றுக்குப் பயந்தவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் தற்கால அரசியல் போக்கானது விமர்சித்தல், வன்முறை, எதிரணி வேட்பாளர்களை தாக்குவது, கடத்தல் மற்றும் கொலை என்பன வரலாற்றில் இடம் பெற்று வருகின்றன. அந்த வகையில் அரசியலில் ஈடுபட முன்வராமைக்கான காரணத்தை குறிப்பிடும் போது நான் வேட்பாளராக போட்டியிட்டால் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் ஏதாவது ஆபத்துக்கள் நேர்ந்தால் நான் என்ன செய்வது (நேர்காணல், 2023). என அச்சப்பட்டு கூறினர். இவ்வாறான நிலையில் பெண்கள் அரசியல் ரீதியான வன்முறைக்கு அச்சப்பட்டு ஒதுங்கிவாழுகின்றனர். எனவே பெண்களின் இயல்பான அச்சமும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவயின்மைக்கு அடிப்படையான காரணமாக அமைகின்றது. அதே போல் தமக்கு ஆண்களால் ஆபத்த ஏற்படலாம் என்று கருதுவதுடன் தாம் அரசியல் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டால் யாரும் எங்களுக்கு ஒத்தழைப்பு வழங்கமாட்டார்கள் போன்ற மனோபாங்கும் ஒலுவில் பெண்கள் மத்தியில் காணப்படுகின்றது.

### சமூக ஊடகங்களின் விமர்சனங்களுக்கு அச்சப்படும் நிலை

இன்று சமூக ஊடகங்கள் எனும் போது முகநூல்பக்கம் (Facebook) பாரிய தாக்கத்தினை உலகளவில் ஏற்படுத்தி வருகின்றது. அதிலும் விமர்சனக் கருத்துக்கள் இன்று பரவலான வெளிப்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் மத்தியில் முகநூல்பக்கம் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதில் குறிப்பாக போலியான முகநூல்பக்கத்தின் மூலமாக விமர்சித்தல், அவதூறு ஏற்படுத்துதல் முதலிய விடயங்களை கடந்த காலங்களில் அவதானித்ததன் விளைவாக தங்களையும் அவ்வாறான சமூக இழுக்குகளுக்கு உள்ளாக்கலாம் என்ற ஒருவகையான அச்ச நிலை இப்பெண்களிடம் உள்ளதனையும் அவதானிக்க முடிந்தது.

### நலன் பேணும் குழுக்களில் அங்கத்துவம் வகித்தல் மற்றும் அரசியல் கட்சிகளில் உறுப்புரிமை பெறுவதில் ஆர்வமின்மை

இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற நலன் பேணும் குழுக்களில் அங்கம் வகித்தலும் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் நடவடிக்கைகளிலும் பெண்கள் குறைவாகவே பங்குபற்றுகின்றனர். எடுத்துக்காட்டாக தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், மகளீர் அமைப்புக்கள் போன்றவற்றிலே ஆண்களுக்கு நிகராக பெண்களால் தங்களது பிரதிநிதித்துவத்தை செலுத்த முன்வராமை குறைபாடாக உள்ளது. அதற்கான காரணமாக தங்களது சமூகத்தின் பார்வை மற்றும் குடும்பச் சுமைகள் என்பவற்றினால் பொது நல விடயங்களில் ஈடுபடுவதிலிருந்து ஒதுங்கிய மனநிலையே இவர்களிடம் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் ஆண்களுடன் ஒப்பிடுகின்ற போது பெண்கள் நலன் பேணும் குழுக்களில் அங்கத்துவம் கொள்வதில் ஆர்வம் குறைவாகவே காணப்படுவதாக அறியமுடிகின்றது.

இப்பிரதேசத்தில் பல பெண்கள் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாக தம்மை பதிவு செய்து கொள்ள முன்வராத நிலை காணப்படுகின்றது. இதனால் இங்கு அரசியல் கட்சி அங்கத்துவத்தில் பெரும்பாலும் ஆண்களே காணப்படுவதுடன் ஆண்களே அங்கத்துவத்திற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். இச்செயற்பாடு தொடர்ந்தும் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கு பாதகமாகவே அமைகின்றது. மேலும், பொதுவான அரசியல் செயற்பாடுகளான பிரச்சார கூட்டங்களை பார்வையிடுதல், கூட்டங்களுக்கு அழைக்கப்படும் போது மட்டும் தங்களை இனங்காட்டிவிட்டால் போதும் என்ற நிலை காணப்படுகின்றது (நேர்காணல், 2023). அத்தோடு அரசியல் கட்சிகளின் கொள்கை தொடர்பில் சாதக - பாதக விமர்சனங்களை முன்வைத்தல் போன்ற செயற்பாடுகளில் பெரும்பாலும் பெண்கள் அக்கறை கொள்வதில்லை.

### அரசியல் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளுதல் மிகக் குறைவு

மக்கள் தாங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகளிடம் அவர்களது கடமைகள் தொடர்பாக கேள்வி எழுப்பவும் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஏனைய சமூக நலன் பேணும் விடயங்கள் தொடர்பாக விவாதிக்க உரிமை காணப்படுகின்றது. ஆயினும் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் அவ்வாறான செயற்பாடுகளில் தாம் ஈடுபடுவது அவசியமில்லாதது என உணர்கின்றனர். ஆனால் இங்கு இப்பிரதேசத்தினைப் பொறுத்த வரையிலே தாங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகளிடம் தொடர்புகளை மேற்கொண்டு தங்களது உரிமைகளை வென்றெடுக்க கூடியவர்களாக ஒப்பிட்டு ரீதியல் ஆண்களே முன்னிலையில் காணப்படுகின்றனர். இதற்கு காரணம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் அனைவரும் ஆண்களாக இருப்பதனால் கூச்ச சுபாவம், அவதூறுக்கு பயம் மற்றும் அச்சம் முதலியவற்றின் காரணமாக பெண்கள் ஆண் பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்வதை விருப்புவதில்லை என்பதை (நேர்காணல், 2023) அறியமுடிந்தது.

### அரசியலில் ஈடுபட பொருளாதார ரீதியான தடைகள் காணப்படுதல்

அரசியலில் ஈடுபடுவதற்கு பொருளாதாரம் அவசியமானதாகும் அதாவது பிரச்சாரங்கள், விளம்பரங்கள் மூலமாக மக்களின் ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கு இது அவசியமாகும். இந்த நிலையில் பெண்கள் ஆண்களின் உழைப்பில் முழுமையாக தங்கியிருக்கும் நிலை அதிகமாக அப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. ஆகவே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ செயற்பாடுகளுக்கு பொருளாதார ரீதியான தடைகள் காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர். இங்கு பெண்கள் தங்களும் தங்கள் குடும்பங்களும் ஆண்களின் பொருளாதாரத்தில் அதிகமாக தங்கியிருக்க வேண்டிய நிலை உள்ளமை குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயமாகும் இதனால் ஆண்களை மீறி, எதிர்த்து அரசியலில் பிரதிநிதியாக வர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர் (நேர்காணல், 2023). இப்பிரதேசத்தில் ஆண்களை சார்ந்து வாழும் பெண்களே அதிகமாக காணப்படுகின்றனர். இந்நிலையினால் இவர்கள் அரசியல் பிரதிநிதித்துவ செயற்பாடுகளில் முழுமையாக பொருளாதார செலவு செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளன இதனால் அரசியல் பிரதிநிதித்துவம் என்ற விடயதானத்தில் இருந்து ஒதுங்கியே இருக்கின்றனர்.

### பெண்கள் சமூகமயமாதலில் உள்ள குறைபாடும், பாரம்பரிய கலாசார செல்வாக்கு காணப்படுதலும்

ஆண்களுடன் பெண்களை ஒப்பிட்டு நோக்குகின்ற போது ஆண்கள் சமூகத்தவர்களுடன் எவ்வித வேறுபாடுமின்றி பழகுவர். ஆனால் பெண்கள் தமது கலாசாரம், மதத்தின் செல்வாக்கு, தமது குடும்பக்கட்டுப்பாடு, சமூக அவப்பெயர் போன்ற காரணிகளினாலும் அரசியல் சமூகமயமாக்கல் தன்மையானது குறைவாக காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் பெண் பிரதிநிதி தமது மக்களின் தேவைகள் தொடர்பாக இரவு நேர பயணம், பல்வேறு நபர்களுடன் கலந்துரையாடல், அடிக்கடி தனிமையில் பிரயாணம் செய்தல் அல்லது சக உறுப்பினர்களுடன் பிரயாணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதுகாப்பின்மை போன்ற காரணிகளை முன்வைத்து பெண்கள் அரசியலில் பங்களிப்பதற்கு விருப்பமற்றவர்களாக உள்ளனர். இதன் காரணமாகவே இன்றுவரையில் ஒலுவில் பிரதேசம் பெண் பிரதிநிதியை தெரிவு செய்ய முடியாமல் உள்ளது. இஸ்லாமிய பாரம்பரியத்தினை கொண்ட ஒலுவில் பிரதேச மக்களிடையே பழமைவாதம், பாரம்பரிய கலாசார அம்சங்கள் நிறைந்துள்ளன. அதாவது இவ்வாறான காலாசார செல்வாக்கினை அடையாளம் காட்டி ஏனைய விடயங்களில் இப்பிரதேசத்தில் பெண்கள் பின் தள்ளப்படுவதனை போன்று அரசியலிலும் பெண்களுக்கான இடம் மறுக்கப்படுகின்றமையை காணலாம். பெண்களை பாரம்பரிய பண்பாடுகள் மற்றும் மதம் என்பன இப் பிரதேச மக்களின் வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாதவையாக காணப்படுகின்றன.

## பெண்களின் அரசியல் பிரதிநித்துவத்தினை அதிகரித்துக் கொள்வதற்கான முன்மொழிவுகள்

1. பெண்களின் அரசியல் பிரதிநித்துவத்தின் தேவை தொடர்பில் விழிப்புணர்வு மற்றும் ஆர்வ நிலையினை உருவாக்குதல்.
2. ஒலுவில் பிரதேசத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதற்காக இப்பிரதேச பெண்களுக்கு மகளீர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் மூலமாக அரசியல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல் வேண்டும். அக்கருத்தரங்குகளில் பெண்களின் அரசியல் உரிமைகள், கடமைகள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதனை நோக்கமாகக் கொண்டு இக்கருத்தரங்குகள் நடாத்துவதன் மூலம் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.
3. அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் தமது வேட்பு மனுப்பத்திரத்தில் பெண் வேட்பாளர்களை இணைத்துக் கொள்வதுடன் பின்னர் வெளிப்படையாக அவர்கள் வேட்பாளராக நின்று வெற்றிபெற இக்கட்சிகள் செயற்படுவதன் மூலம் பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியும்.
4. முஸ்லிம் பெண்களின் தற்கால அவசியத்தையும் பெறுமதித் தன்மையினையும் முஸ்லிம் சமூகத்திலுள்ள சமயம் சார் நிறவனங்களை வலுப்படுத்தி அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான ஆர்வத்தினை ஏற்படுத்துதல். இதன் மூலமாக தம்மீதும் தமது சமூகம் மீதும் அக்கறை கொண்ட பெண்களாக மாற்றல் வேண்டும்.
5. முஸ்லிம் பெண்கள் தேர்தலில் போட்டியிட முன்வருகின்ற போது ஆண்களோ அல்லது பெண்களோ அப்பெண்களின் முயற்சியினை ஏளனம் செய்யாது ஆதரவளித்து அப்பெண்களுக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றுதல், அத்துடன் குறித்த அப்பெண்கள் தேர்தலில் வெற்றிபெற முக்கியமாக பெண்கள் தமது வாக்குளை அளிப்பதற்கு ஊக்குவித்தல்.
6. இப்பிராந்தியத்தில் காணப்படும் பிரதான முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் அப்பகுதி பெண்களையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலமாக அரசியல் ரீதியான அச்ச உணர்வு நீக்கப்படுவதுடன் தமக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிகளும் உருவாக்கப்படல் வேண்டும்.
7. பெண்களிடம் உள்ள இயல்பான அச்சம், பயம் போன்றவற்றை அகற்றி அவர்களை அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்றவகையில் உள ரீதியாக தயார்ப்படுத்தல்.
8. அரசியல் கட்சிகளில் முஸ்லிம் பெண்களை அதிகமாக இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல்.
9. ஊடகங்களின் மூலமாக விழிப்புணர்வு செயற்திட்டததினை மேற்கொள்ளல். அந்த வகையில் பத்திரிகைகள், இணையத்தளம் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றிலே பெண்களுக்கான நவீனத்துவ அரசியல் முறைபற்றியும் அரசியல் பங்குபற்றல் பற்றியும் தெளிவுபடுத்தக்கூடிய வகையில் கட்டுரைகள் ஆக்கங்கள் விளம்பரங்களை வெளிப்படுத்தல் வேண்டும்.
10. பெண்கள் தேர்தல்களில் போட்டியிட முன்வருகின்ற போது அவர்களை உதாசினப்படுத்தாமல் மாற்ற ஊக்கப்படுத்துபவர்களாக அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அதிலும் குறிப்பாக அப் பெண்ணின் கணவர் உற்சாகப்படுத்தக்கூடியவராகவும் அதற்கு உதவக்கூடியவராகவும் இருத்தல் அவசியமானதாகும். அவ்வாறே சில நேரங்களில் சமூக ரீதியான அவப்பெயர் அப்பெண்ணுக்கு ஏற்படுகின்ற சந்தர்பங்களில் ஆறுதல் தெரிவித்து உற்சாகமாளிக்கக்கூடியவராக அப்பெண்ணினது கணவன் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் காணப்படுதல் வேண்டும்.
11. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அதிகளவு செலவீனம் ஏற்படுவதனால் அரசியல் கட்சியானது பெண் வேட்பாளர்களின் தேர்தல் செலவீனங்களை ஈடுசெய்யக்கூடிய வழிமுறைகளை கொண்டுவருதல் வேண்டும். அதனூடாக அரசியல் பிரதிநிதித்துவத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான நிலையினை ஏற்படுத்துதல்.

12. இப்பிரதேசமானது இறுக்கமான பாரம்பரிய கலாசார பின்னணியைக் கொண்டு காணப்படுகின்றது. இந்நிலையில் இவ் இறுக்கமான கலாசாரத் தன்மைகளிலிருந்து விடுபட்டு பெண்களால் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே இப்பிரதேச மார்க்க அறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், புத்துஜீவிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பெண்களின் கலாசார தன்மைக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பினை ஏற்றபடுத்தல் வேண்டும்.
13. குடும்ப சுமை போன்ற பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பாதிப்பு செலுத்தும் காரணிகளில் இருந்து விடுபட்டு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க செய்ய இப்பிரதேசத்தில் பெண்கள் நலன்சார் குழுக்களை உருவாக்குதல்.
14. பெண்களின் தாழ்வான மனநிலையினை போக்குவதற்காகவும் அதில் இருந்து பெண்களை மீட்பதற்காகவுமான வேலைத்திட்டங்களினை மேற்கொள்ள வேண்டும், அத்தோடு இப்பிரதேசத்தில் இடம் பெறும் அனைத்து கொள்கை உருவாக்க செயற்பாடுகளிலும் பெண்களையும் கலந்து கொள்வதற்கான வாய்பினை உருவாக்குதல் வேண்டும்.
15. முஸ்லிம் சமூகம் பெண்களை இரண்டாம் தர பிரஜைகளாக நோக்குவதை விடுத்து அவர்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்கும் வகையில் செயற்பட முன்வர வேண்டும்.
16. அரசாங்கம் சட்ட ரீதியாக பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தினை(விகிதாசார ரீதியாக) ஏற்படுத்துவதுடன் அதை உறுதிப்படுத்துவதன் மூலமாகவும் இப்பிரதேசப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிக்க முடியும்.

## முடிவுரை

ஒலுவில் பிரதேசமானது சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய ஒரு பிரதேசமாக காணப்படுகின்றமையானது பெண்கள் இங்கு அரசியலில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ஒரு சவாலான விடயமாகக் காணப்படுகின்றது. அத்தோடு இங்கு ஆண்களோடு ஒப்பிடுகின்ற போது பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் காணப்படாமை ஆராயப்பட வேண்டிய விடயமாகும். தேசிய அரசியல் மற்றும் உள்ளுராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் நடைமுறையில் அப்பிரதிநிதித்துவங்கள் குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் தற்போது முஸ்லிம் பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவம் மிகக் குறைந்த நிலையிலேயே உள்ளது. குறிப்பிட்ட ஒலுவில் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இன்றுவரையில் காணப்படவில்லை. ஆயினும் ஒலுவில் பிரதேசத்தில் பெண்களினுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வின் மூலமாக பல்வேறு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டது. அதன் அடிப்படையில் இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்மைக்கான காரணங்களாக விழிப்புணர்வின்மை, அரசியல் கட்சிகள் முன்னுரிமைப்படுத்தாமை, குடும்பசூழ்நிலை, பெண் வெட்பாளர்களுக்கு பெண்களே ஆதரவு வழங்காமை, கலாசார தாக்கத்தின் பின்னணி போன்ற காரணிகள் காணப்படுவதனை அறிய முடிகின்றது. ஆயினும் இதற்கு மாற்றமாக இங்கு அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்தல், பெண்களை ஊக்கப்படுத்தல், அரசியல் கட்சிகள் ஊக்குவித்தல், கலாசார ரீதியில் ஊக்குவிப்பு வழங்கல் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை உருவாக்கவும் பெண் பிரதிநிதித்துவங்களினை தொடர்ந்து பேணிக்கொள்ளவும் அரசியல் பிரதிநிதியாக செயலாற்றக்கூடிய பயிற்சியையும் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறே அண்மைக்காலத்தில் முஸ்லிம் பெண்கள் சார்ந்து சமூக, கல்வி ரீதியாக அபிவிருத்தி இப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. எனினும் இப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட சவால்களுக்கு தீர்வு கண்டு அவற்றை நிவர்த்தி செய்து பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரித்துக் கொள்வதுடன் பாலின சமத்துவத்தினை ஏற்படுத்துவதனூடாக மக்களாட்சி முறையான ஜனநாயகத்தினை பலப்படுத்த முடியும்.

## References

Kannaraj, A. (2018) Ulaga Nadukalil Penkalin Arasiyal Prathinithithuvam: Ilankaiyai Sirapaga Kondathor Aivu, Neithal, 9(2) 6-12. Available at: http://www.digital.lib.esn.ac.lk/handle/123456789/13798

Liyanake Kamala (2012) Ilankaiyil Ullurachi Mandrankalil Penkalin Arasiyal Prathinithithuvam: Savalkalum Ethirrpapukalum, Fedrich Ebert Stiftung, Colombo, Sri Lanka.

Nazeera, J.F., Fasan, A.P.M., Lasmiya, A.S. (2018) Muslim Women and Political Representation: A Research On 2018 Gallewalla Local Government Elections, 5th International Symposium. Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. 104-111.

Saravanan, N. (2002) Ilankayil Arasiyal Penkalum Penkalin Arasiyalum, Mondravathu Manithan Pathippagam, Colombo, Sri Lanka.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Authors have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author(s) 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

T. Mohamed Mufas, C. Sivanayagam, Challenges and Solutions for the political representation of Muslim Women in Sri Lanka : A research based on Oluvil region, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 1, (2024) 11-19. DOI: https://doi.org/10.54392/ijmrd2412